மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : While the Minister answers that there is no small-pox rampant in the City of Madras, is he aware of a press note issued by the Health Officer, Corporation of Madras last month as well as in the beginning of this month that small-pox is in a rampant condition and is spreading taking a lot of victims in the City of Madras?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The Director of Public Health has reported that small-pox is not rampant in the City of Madras. There was not a single attack of small-pox in the last six months. At present there is only a sporadic infection starting from January this year.

THIRU K. VINAYAKAM : May I know how many patients suffering from smallpox were admitted in the Infectious Diseases Hospital?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The hon. Member may put a separate question.

காலரா

* 203 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966–67-ல் தென்னார்க்காடு ஜில்லாவில் காலரா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுள், இறந்து போனவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) 363 நபர்கள்.

(இ) 137 நபர்கள்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இதை தாலூகாவாரியாகக் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தாலூகாவாரியாக இல்லை. தென் ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் விவரம் கொடுத்திருக்கிறேன்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இந்தக் காலரா நோய் பரவக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பல காரணங்கள் உண்டு.